සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

තෙවන වාර පරීක්ෂණය
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026
Third Term Test

ශ්‍රේණිය / தரம் / Grade: 13	විෂයය / பாடம் / Subject: **கணக்கீடு**	පත්‍රය / வினாத்தாள் / Paper: I	පැය / மணித்தியாலம் / Hours: 02

அறிவுறுத்தல்கள்

- அனைத்து வினாக்களுக்கும் விடைத்தருக
- 1 – 30 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக
- 31 – 50 வரையிலான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக

1. பின்வரும் கூற்றுக்களுள் எது நிறுவனமொன்றின் நிதிக் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை மிகவும் சிறப்பாக விபரிக்கின்றது?

   1. அலகொன்றின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினருக்கு கடந்தகால, எதிர்கால நிதி தகவல்களை தொடர்பாடல் செய்வதாகும்.
   2. அலகொன்றின் வெளிக்கட்சியினருக்கு பொருளாதார தீர்மானங்களை எடுப்பதற்காக வரலாற்று மற்றும் எதிர்வுகூறப்பட்ட நிதி தகவல்களை தொடர்பாடல் செய்வதாகும்.
   3. அலகொன்றின் உள்ளக கட்சியினருக்கு எதிர்கால பொருளாதார தீர்மானங்களை எடுப்பதற்காக தேவைப்படும் எதிர்வு கூறப்பட்ட தகவல்களை ஆக்கம் செய்தலாகும்
   4. பொது நோக்குடைய நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கங்களுக்கான நிதி, நிதி அல்லாத தகவல்களை ஆக்கம் செய்தலாகும்
   5. அலகொன்றின் மீது எல்லா அக்கறை கொண்ட பிரிவினருக்கும் நிதி தேவைகளை நிறைவேற்றுவதற்கான தீர்மானங்களை எடுப்பதற்கான தொடர்பான தகவல்களை வழங்கல் (..........)

2. நிறுவனமொன்றின் ஆதன பொறி உபகரணங்களில் உள்ளடங்கியிருக்கும் தேய்விடக் கூடிய சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் அவற்றின் தேறிய பெறுமதி மீது அடையாளம் காணல் எவ் கணக்கீட்டு எண்ணக்கருவினை அடிப்படையாக கொண்டு ஆகும்.

   1. பண அலகு
   2. பொருண்மை
   3. பாதுகாப்பு
   4. கால எண்ணக்கரு
   5. தொடாந்தியங்குதல் (..........)

3. கீழ் வரும் கணக்கீட்டு முறைகளுக்கிடையில் தேறல் எண்கருவுடன் நேரடியாக தொடர்புடைய கணக்கீட்டு முறையாக இருப்பது.

   1. கடன் விற்பனை மீது ஏற்படும் அறவிடமுடியா கடன் குறிப்பிட் காலப்பகுதியின் செலவொன்றாக அடையாளம் காணல்
   2. வியாபார வருமதிகளானவை நிதி நிலமைக்கூற்றில் அதன் தேறிய பெறுமதியில் அடையாளம் காணல்
   3. முதலீட்டு வருமானம் சில்லறை வியாபாரமொன்றில் பிற வருமானமொன்றாக அடையாளம் காணல்
   4. விற்பனை அன்றேல் திரும்பல் என்ற அடிப்படையில் வாடிக்கையாளரொருவருக்கு அனுப்பட்ட இருப்பு அவை அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில் கடன் விற்பனையாக அடையாளம் காணல்
   5. காசு பாச்சல் கூற்றினுல் எல்லா வருமானங்களும் காசு அடிப்படையில் அடையாளம் காணல் (.........)

❖ இலக்கம் 4,5,6 மற்றும் 7 ஆம் வினாக்களுக்கு விடை அளிப்பதற்கு கீழ் வரும் தகவல்களை பயன்படுத்திக்கொள்க பெறுமதி சேர் வரி அடிப்படையிலான வரி (VAT) அறவிடுவதற்கு பதிவு செய்யப்பட்ட வணிகமொன்றின் 2026 மாச்ச் மாதத்தினுள் கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

3-1 உரிமையாளர் மேலதிக மூலதனமாக 500,000 ரூபாவை வணிகத்தில் ஈடுபடுத்தல்

3-6 240,000 ரூபா கிரயம் கொண்ட இருப்பு தொகுதியொன்று 354,000 ரூபாவுக்கு (18% VAT உள்ளடங்களாக) ரவிக்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

3-10 கிரயத்தின் மீது $33^1/_3$ இலாப வீதம் கிடைக்கும் வகையில் 236,000 ரூபாவுக்கு (18% VAT உள்ளடங்களாக) இருப்பு தொகுதியொன்று உடன் காசிறகு விற்பனை செய்யப்பட்டது.

3-12 ரவிக்கு மேற்கொள்ளப்பட்ட 3/6 ஆம் திகதி விற்பனையில் $^1/_4$ பகுதி இருப்பு அவரினால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

3-20 15,500 ரூபா காசு கழிவு வழங்கப்பட்டு ரவியின் வருமதி முழுமையாக வசூலிக்கப்பட்டது.

4. 3/1, 3/6, 3/12 மற்றும் 3/20 ஆம் திகதிகளில் வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை புத்தகங்களில் பதிவுசெய்வதுடன் தொடர்பான மூல ஆவணங்களை முறையே காட்டும் விடையை தெரிவு செய்க.

   1. நாட்குறிப்பேட்டு கச்சாத்து, பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
   2. பற்றுச்சீட்டு, பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
   3. பற்றுச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
   4. நாட்குறிப்பேட்டு கச்சாத்து, பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
   5. பற்றுச்சீட்டு, பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு கச்சாத்து (………)

5. 3-12 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலினை பொதுப்பேரேட்டில் பதிவு செய்வதுடன் தொடர்பான சரியான இரட்டை பதிவாக அமைவது

   1. கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு – வரவு 88,500 ரூபா
      உட்டிரும்பல் கணக்கு – செலவு 75,000 ரூபா
      VAT கட்டுப்பாட்டு கணக்கு – செலவு 13,500 ரூபா
   2. கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு – வரவு 70,800 ரூபா
      உட்டிரும்பல் கணக்கு – செலவு 60,000 ரூபா
      VAT கட்டுப்பாட்டு கணக்கு – செலவு 10,800 ரூபா
   3. உட்டிரும்பல் கணக்கு – வரவு 88,500 ரூபா
      VAT கட்டுப்பாட்டு கணக்கு – செலவு 13,500 ரூபா
      கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு – செலவு 75,000 ரூபா
   4. உட்டிரும்பல் கணக்கு – வரவு 60,000 ரூபா
      VAT கட்டுப்பாட்டு கணக்கு – வரவு 10,800 ரூபா
      கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு – செலவு 70,800 ரூபா
   5. உட்டிரும்பல் கணக்கு – வரவு 75,000 ரூபா
      VAT கட்டுப்பாட்டு கணக்கு – வரவு 13,500 ரூபா
      கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு – செலவு 88,800 ரூபா (............)

6. மேற்கூறப்பட்ட எல்லா கொடுக்கல் வாங்கல்களும் இறுதியில் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் தேறிய தாக்கத்தை சரியாக காட்டும் விடையினை தெரிவு செய்க

	சொத்து (ரூபா ‘000)	=	பொறுப்பு (ரூபா ‘000)	+	உரிமை (ரூபா ‘000)
1.	656	=	76.5	+	579.5
2.	642.5	=	63	+	579.5
3.	156	=	76.5	+	79.5
4.	596	=	76.5	+	519.5
5.	656	=	63	+	593

(………)

7. மேற்கூறப்பட்ட எல்லா கொடுக்கல் வாங்கல்களும் கவனத்தில் கொள்ளப்பட்ட பின் 2026 – மார்ச் மாதத்துடன் தொடர்பான மொத்தச் செலவும் மற்றும் மார்ச் மாதத்தினுல் காசு மீதியின் தேறிய அதிகரிப்பு / குறைவு எவ்வளவு?

	மொத்தச் செலவு (ரூபா ‘000)	காசு மீதி (ரூபா ‘000)
1.	390	அதிகரிப்பு 986
2.	390	அதிகரிப்பு 1001.5
3.	345.5	அதிகரிப்பு 845.5
4.	345.5	அதிகரிப்பு 986
5.	405.5	அதிகரிப்பு 1001.5

(……….)

8. 2026 ஜனவரி 31 இல் செல்வத்தின் வணிகத்திற்கு கிடைக்கப்பெற்ற வங்கி கூற்றுக்கமைய காணப்பட்ட செலவு மீதி ரூபா 186,000 ஆகும். அன்றைய தினம் வணிகத்தின் காசு கணக்கின் படி வரவு மீதி ரூபா 185,000 ஆகும்.

- ❖ 2026 ஜனவரி 01 இல் காசு கணக்கின் மீதி அன்றைய தினத்திலான வங்கி கூற்று மீதியை பார்க்கிலும் 65,000 ரூபா அதிகமாக காணப்பட்டதோடு 2025 டிசம்பர் 31 இல் கொடுப்பனவுக்கு சமர்பிக்கப்படாத காசோலை எதுவும் இல்லை.
- ❖ 2026 ஜனவரி மாதத்திற்கான வங்கி கூற்றில் கீழ் வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன. இவை காசு கட்டுப்பாட்டு கணக்கில் சீராக்கப்படவில்லை

  நேரடி வைப்பு ரூபா 60,000

  நிலையான கட்டளையின் படியான கொடுப்பனவுகள் (காப்புறுதி) ரூபா 23,000

  வங்கி கட்டணம் ரூபா 2,000
- ❖ 2026 ஜனவரி மாதத்தில் வைப்பிலிட்ட காசோலைகள் ரூபா 240,000
- ❖ ஜனவரி மாதத்திற்கான வங்கி கூற்றுக்கமைய நேரடி வைப்பு தவிர வைப்புக்களின் பெறுமதி ரூபா 100,000 ஆகும்.

2026 ஜனவரி 31 இல் சீராக்கப்பட்ட காசு கணக்கின் மீதி மற்றும் அன்றைய தினத்திலான கொடுப்பனவுக்கு சமர்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதியாக அமைவது

	சீராக்கப்பட்ட காசு கணக்கின் மீதி ரூ.	கொடுப்பனவுக்கு சமர்பிக்கப்படாத காசோலை பெறுமதி ரூ.
1.	221,000	171,000
2.	220,000	171,000
3.	220,000	205,000
4.	220,000	106,000
5.	220,000	36,000

(……….)

வினா இலக்கம் 09,10 ற்கு விடை அளிப்பதற்கு கீழ் வரும் தகவல்களை பயன்படுத்திக் கொள்க

❖ சாந்தன் வணிகத்தில் 2026-03-31 இல் முடிவடைந்த அரை வருடத்திற்கான வரைபு நிதிக்கூற்றுக்களுக்கு அமைய தேறிய இலாபம் 373,000 ரூபாவாகும். எனினும் அக் காலப்பகுதினுள் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் போது மற்றும் முடிவு கணக்குகளை தயாரிக்கும் போதும் கீழ் வரும் வழுக்கள் இடம்பெற்றுள்ளதாக பின்னர் இனம் காணப்பட்டது.

A - 2025 டிசம்பர் மாதம் வெளித்திரும்பல் நாளேட்டின் மொத்தம் ரூபா 10,000 இனால் மிகையாக கூட்டப்பட்டிருந்தது.

B - காசாக பெற்ற தரகு வருமானம் ரூபா 16,000 பேரேட்டு கணக்குகளில் பதிவு செய்யும் போது பெற்ற தரகு வருமான கணக்கில் இரண்டு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தது.

C - 2026-01-31 இல் 5,000 ரூபா வட்டி உட்பட காசாக செலுத்திய 25,000 வங்கி கடன் தவணைக்கட்டணம் வங்கி கடன் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் ஏனைய கணக்குகளில் சரியாக பதியப்பட்டிருந்தன.

D - 2026 மார்ச் மாதத்திற்கான மின்கட்டணம் ரூபா 7,200 மார்ச் 31 இல் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் அது மின்கட்டண கணக்கில் வரவு வைக்கப்பட்டு வியாபார சென்மதி கட்டுப்பாட்டு கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

E - ஆதன பொறி உபகரணம் தொடர்பான வருடாந்த தேய்வு ரூபா 60,000 மற்றும் மாதாந்த வாடகை வருமானம் ரூபா 6,000 இலாபத்தை கணிப்பிடும் போது சீராக்கப்பட்டிருக்கவில்லை. (காலப்பகுதிக்கான வாடகை வருமானம் காசாக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.)

9. மேற்கூறப்பட்ட வழுக்களை திருத்த முன் தொங்கற் கணக்கில் நிலவிய மீதி மற்றும் சீராக்கப்பட்டதினால் வணிகத்தின் பொறுப்புக்கள் மீத ஏற்பட்ட தேறிய தாக்கத்தை காட்டும் விடையாக அமைவது.

	தொங்கற் கணக்கின் மீதி	பொறுப்புக்கள் மீதான தேறிய தாக்கம்
1.	ரூபா 25,000 (வரவு)	ரூபா 15,000 இனால் குறையும்
2.	ரூபா 36,000 (வரவு)	ரூபா 10,000 இனால் குறையும்
3.	ரூபா 41,000 (வரவு)	ரூபா 15,000 இனால் குறையும்
4.	ரூபா 36,000 (செலவு)	ரூபா 7,800 இனால் குறையும்
5.	ரூபா 41,000 (செலவு)	ரூபா 10,000 இனால் குறையும்

(……….)

10. 2026-03-31 இல் முடிவடைந்த அரை வருடத்திற்கான சரியான தேறிய இலாபமாக அமைவது

1. ரூபா 348,000
2. ரூபா 353,000
3. ரூபா 345,800
4. ரூபா 340,800
5. ரூபா 359,000

(……….)

11. தனியுடைமை வணிகமான சாந்தியின் வணிகத்தில் 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கீழ் வரும் தகவல்கள் உமக்கு வழங்கப்படுகின்றன.

	ரூபா’000
மொத்தச் செலவு	2,400
விற்பனை	5,200
காலப்பகுதியினுல்	
இருப்பு குறைவு	200
வியாபார சென்மதிகளின் குறைவு	200
வியாபார வருமதிகளின் அதிகரிப்பு	300

மேலதிக தகவல்கள்

- எல்லா விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதோடு வருடத்தினுல் உடன் காசு கொள்வனவு 400,000 ரூபாவாகும்.

2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வணிகத்தின் காசு அடிப்படையில், அட்டுறு அடிப்படையில் மொத்த இலாபமாக அமைவது

	காசு அடிப்படையில் ரூ.’000	அட்டுறு அடிப்படையில் ரூ. ‘000
1.	2,400	2,600
2.	2,700	2,600
3.	2,900	2,800
4.	2,700	2,800
5.	2,300	2,600

(……….)

12. வணிக நிறுவனமொன்றில் பேரேட்டினை பேணுவது தொடர்பாக கீழ் வரும் கூற்றுக்களில் சரியான கூற்று யாது?

1. துணை பேரேட்டுடன் பேரேட்டினை பேணிக்கொள்ளும் பொது பேரேட்டினுல் ஒற்றை பதிவு முறையில் கணக்குகள் பேணப்படும்
2. பொது பேரேட்டினுல் கட்டுப்பாட்டு கணக்குகள் பேணப்படுவதால் கடன்கொடுனர் / கடன்படுனரின் தனிப்பட்ட கணக்குகள் எந்தொரு பேரேட்டிலும் பேணுவது அவசியமில்லை
3. துணை பேரேடுகளின் பட்டோலை மீதியின் மொத்தம் காலப்பகுதியின் முடிவில் பொது பேரேட்டின் கட்டுப்பாட்டு கணக்குகளுக்கு மாற்றப்படும்.
4. பொது பேரேட்டின் திருத்திய கட்டுப்பாட்டு கணக்குகளின் மீதி நிதிநிலமை கூற்றினுல் சமர்பிக்கப்படும்.
5. துணை பேரேட்டின் பட்டோலை மீதியின் மொத்தம் எல்லா நிலைமைகளிலும் சரியான மீதியாக கவனத்தில் கொள்ளப்படும் .(……….)

வினா இலக்கம் 13, 14 இற்கு விடையளிப்பதற்கு கீழ் வரும் தகவல்களை பயன்படுத்திக்கொள்க

“சியத” வணிக நிறுவனத்தில் 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்காக கணிப்பிடப்பட்ட கிரய தகவல்கள் கீழ் தரப்படுகின்றது. வணிகம் 2025-04-01 இல் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

அலகொன்றின் உற்பத்தி கிரயம் 108 ரூபா

2026-03-31 இல் முடிவுப்பொருள் (கிரயத்தில்) 172,800 ரூபா

விற்பனை கிரயம் 691,200 ரூபா

மேலதிக தகவல்கள்

1. வணிகத்தின் உற்பத்தி இயந்திரத்தின் கிரயம் ரூபா 1,400,000 ஆவதோடு கிரயத்தின் மீது 10% இயந்திரம் தேய்வு செய்யப்பட வேண்டி இருந்தும் உற்பத்தி கிரயத்தை கணிப்பிடும் போது அது விடுப்பட்டிருந்தது
2. உற்பத்தி ஊழியர்களின் சம்பளத்துடன் தொடர்பான ஊழியர் சேமலாப நிதியம் (EPF) தொழில்கொள்வோரின் பங்களிப்பு ரூபா 36,000 தொடர்பான சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை
3. வருடத்தினுல் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி அலகுகளில் 20% 2026-03-31 இல் எஞ்சியிருந்தது.

13.2026-03-31 இல் முடிவடையும் வருடத்தினுல் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை மற்றும் எல்லா கிரயங்களும் கவனத்தில் கொள்ளப்பட்ட பின் அலகொன்றின் உற்பத்தி கிரயமாக அமைவது

	உற்பத்தி அலகுகள்	அலகின் உற்பத்தி கிரயம் (ரூபா)
1.	8,000	125.50
2.	1,600	122
3.	8,000	130
4.	8,000	112,50
5.	6,400	130

(……….)

14.2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான சரியான விற்பனை கிரயமாக அமைவது

1. ரூபா 1,040,000 2. ரூபா 900,000 3. ரூபா 832,000
4. ரூபா 869,600 5. ரூபா 831,200 (……….)

15.“சமனல” விளையாட்டு கழகத்தின் சந்தா பெறுவனவு தொடர்பான கீழ் வரும் தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன

	2026-03-31 ரூபா “000	2025-03-31 ரூபா “000
அட்டுறு சந்தா பணம்	18	25
முற்பண சந்தா பணம்	?	32
ஆயுட்கால சந்தா பணம்	162	202

❖ 2025 / 2026 வருடத்தினுல் காசாக கிடைத்த சந்தா பணம்

2024 / 2025	வருடத்திற்காக	ரூபா 18,000
2025 / 2026	வருடத்திற்காக	ரூபா 122,000
2026 / 2027	வருடத்திற்காக	ரூபா 1,000

❖ 2024 / 2025 வருடத்திற்காக 2026-03-31 இல் அட்டுறு சந்தா பதிவழிப்பு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

❖ மேலே காட்டப்பட்டுள்ள 2026-03-31 அட்டுறு சந்தா பணத்தினுல் 2024 / 2025 வருடத்திற்கான அட்டுறு சந்தா உள்ளடங்கவில்லை

2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்காக இனங்காணப்பட்ட வேண்டிய மொத்த சந்தா வருமானம்

1. ரூபா 212,000
2. ரூபா 172,000
3. ரூபா 165,000
4. ரூபா 205,000
5. ரூபா 179,000

(………)

வினா இலக்கம் 16, 17 இற்கு விடை அளிப்பதற்கு கீழ் தகவல்களை பயன்படுத்திக்கொள்க

❖ சாந்தி, அமைதி, சமாதானம், ஆகியோர் முறையே 2 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாபநட்டங்களை பங்கிட்டுக்கொள்ளும் பங்குடைமை வணிகமொன்றின் பங்காளராவர். வருடத்தில் மூலதன கணக்கு மீதிக்கு 10% மூலதன வட்டிக்கு உரித்துடையவர். 2025 / 2026 வருடத்துடன் தொடர்புடைய பங்காளரின் உரிமையாண்மை தொடர்பான தகவல்கள் சில கீழ் வருமாறு

ரூபா "000

பங்காளர்	2025-04-01 இல் பங்காளர் நடைமுறை கணக்கு மீதி	2026-03-31 இல் பங்காளர் மூலதன கணக்கு மீதி	2025 / 2026 வருடத்திற்கான		
			மூலதன வட்டி	இலாப பங்கு	பற்று
சாந்தி	800	3,425	350	220	170
அமைதி	700	3,425	350	220	70
சமாதானம்	750	2,650	250	110	110

❖ 2026-03-31 இல் சமாதானம் பங்குடைமை வணிகத்திலிருந்து ஓய்வு பெற தீர்மானித்துள்ளதோடு அன்றைய தினத்திலான நன்மதிப்பு மூலதன கணக்கில் சீராக்கம் செய்த பின் உள்ள மூலதன கணக்கு மீதியே மேலே காட்டப்பட்டுள்ளது. ஓய்வு பெறுவதுடன் தொடர்பான வேறு எந்தொரு சீராக்கமும் மேற்கொள்ளப்படவில்லை

❖ 2026-03-31 இல் ரூபா 2,000,000 கிரயத்தையும் திரண்ட தேய்வு ரூபா 350,000 கொண்ட மோட்டார் வாகனமொன்று அதன் தேறிய பெறுமதியில் சமாதானத்திற்கு ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டதோடு எஞ்சிய உரிமை கடன் கணக்கிற்கு மாற்றுவதற்கு பங்காளர் உடன்பட்டனர்.

❖ சாந்தியும் அமைதியும் தொடர்ந்து இலாபநட்ட விகிதத்தினை சமமாக பங்கிட தீர்மானித்தர்.

16.பங்குடைமை வணிகத்தின் 2025-04-01 இல் மற்றும் சமாதானம் ஓய்வு பெறுவதற்கான எந்தொரு சீராக்கமும் மேற்கொள்ள முன் 2026-03-31 இல் பங்குடைமை வணிகத்தின் மொத்த உரிமையாண்மையாக அமைவது

	2025-04-01 இல் ரூபா '000	2026-03-31 இல் ரூபா '000
1.	11,750	12,550
2.	11,750	12,400
3.	12,550	11,450
4.	11,750	12,900
5.	12,400	11,750

(……..)

17.சமாதானம் ஓய்வு பெற்ற தினத்திற்கு வணிகத்தின் மொத்த நன்மதிப்பு பெறுமதி மற்றும் 2026-04-01 இல் சமாதானத்தின் கடன் கணக்கின் மீதி

	மொத்த நன்மதிப்பு ரூபா '000	கடன் கணக்கின் மீதி ரூபா '000
1.	375	2,000
2.	750	3,650
3.	375	3,650
4.	750	2,650
5.	750	2,000

(……..)

வினா இலக்கம் 18, 19 இற்கு விடை அளிப்பதற்கு கீழ் வரும் தகவல்களை பயன்படுத்திக்கொள்க

வரையறுக்கப்பட்ட நிசாந்த பொது கம்பனி 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்காக மொத்த முற்றுமடங்கிய வருமானம் ரூபா 2,900,000 ஆகும். மொத்த முற்றுமடங்கிய வருமானத்தை கணித்துக்கொள்ளும் போது கவனத்தில் கொள்ளப்பட்ட தகவல்கள் சில கீழ் வருமாறு

		ரூபா ‘000
வருமானம் -	விற்பனை	11,000
	சேவை வழங்கல்	1,400
பிறவருமானம்		1,000
செயற்பாட்டுச் செலவுகள்		2.800
வருமானவரி செலவுகள்		700

மேலதிக தகவல்கள்

i. 2025 / 2026 வருடத்திற்கான மொத்த இலாபம் ரூபா 4,000,000 ஆகும். பிறவருமானமாக அடையாளம் காணப்பட்டிருப்பது கம்பனியின் மோட்டார் வாகனம் 2026-03-31 இல் முதற் தடவையாக மீள்மதிப்பீடு செய்ததினால் கிடைத்த மிகையாகும்.

ii. 2025-04-01 இல் வணிகத்தின் கட்டிடங்கள் இரண்டாம் தடவை மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு அத்தினத்தில் அடையாளம் காணப்பட்ட மிகை ரூபா 1,800,000 ஆகும். (2024-04-01 இல் முதற் தடவை மீள்மதிப்பீடு செய்யப்பட்டதினால் கிடைத்த மீள்மதிப்பீட்டு மிகை ரூபா 1,500,000 ஆகும்.)

iii. 2024-04-01 இல் வணிகத்தின் காணி முதற் தடவையாக மீள்மதிப்பீடு செய்ததினால் ரூபா 600,000 மிகையொன்று பதிவு செய்யப்பட்டிருந்ததோடு 2025-04-01 இல் இரண்டாம் தடவை மீள்மதிப்பீடு செய்ததினால் குறையொன்று அடையாளம் காணப்பட்டிருந்தது.

18.2025-04-01 இல் காணி இரண்டாம் தடவை மீள்மதிப்பீடு செய்ததினால் அடையாளம் காணப்பட்ட மீள்மதிப்பீட்டு குறை எவ்வளவு?

1. ரூபா 2,400,000 ஆகும் 2. ரூபா 400,000 ஆகும் 3. ரூபா 1,400,000 ஆகும்
4. ரூபா 1,800,000 ஆகும் 5. ரூபா 600,000 ஆகும் (……..)

19.2026-03-31 இல் முடிவடைந்த வருடதிற்கான மொத்த வருமானம், மொத்த செலவாக அமைவது.

	மொத்த வருமானம் ரூபா ‘000	மொத்தச் செலவு ரூபா ‘000
1.	15,800	12,900
2.	16,200	13,000
3.	15,200	12,300
4.	15,200	11,300
5.	16,200	13,300

20.LKAS – 02 “இருப்பு” தொடர்பான நியமத்திற்கமைய பிழையான கூற்றாக அமைவது கீழ்வருவனவற்றுல் யாது?

1. கொள்வனவு கிரயத்தை கணிப்பிடும் போது கொள்வனவு விலையிலிருந்து வியாபார கழிவு கழிக்கப்பட வேண்டும்.
2. களஞ்சிய கிரயம் எந்தொரு நிலைமையிலும் இருப்பின் கிரயத்தினுல் உள்ளடக்கப்பட கூடாத கிரயமாகும்.
3. இருப்பு விற்பனை செய்யப்படும் போது விற்பனை செய்யப்பட்ட இருப்பு தொடர்பாக புத்தகங்களில் உள்ள பெறுமதி (தேறிய பெறுமதி) விற்பனை செய்யப்பட்ட காலப்பகுதியுடன் தொடர்பான செலவாக கவனத்தில்கொள்ளப்படும்.
4. இருப்பின் கிரயம் மற்றும் தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதி இருப்பினை கணிப்பிடும் போது உருப்படி முறை மீது அல்லது தொகுதி முறை மீது இருப்பு கிரயம் மற்றும் தேறக் கூடிய பெறுமதி தீமானிக்க கூடியதாக இருக்கும்.
5. மாறும் உற்பத்தி மேந்தலை கிரயம் உற்பத்தி அலகுகளுக்கு இடையில் பகிருவதற்கு உற்பத்தி செய்யப்பட்ட உண்மை அலகுகளின் எண்ணிக்கை அடிப்படையாக கொள்ளப்பட வேண்டும். (…….)

21.LKAS – 07 “காசு பாச்சல் கூற்றுக்கு” அமைய கீழ் வரும் உருப்படிகள் தொடர்பான சரியான காசு பாச்சல் வகையினை முறையே காட்டும் விடை யாதாக அமைபுயம்?

A - வேறு பொது கம்பனியொன்றின் நீண்ட கால தொகுதி கடன் பத்திரங்களை கொள்வனவு செய்வதற்கு செலுத்திய காசு

B - அவ் தொகுதி கடன் பத்திரங்களுக்காக வருட இறுதியில் காசாக பெற்ற வட்டி

C - செலுத்திய வட்டி தவிர்த்து குத்தகை தவணைக் கட்டணம்

D - காசாக பெற்ற தரகு வருமானம்

1. நிதி, முதலீடு, நிதி, முதலீடு நடவடிக்கை
2. முதலீடு, முதலீடு, நிதி, முதலீடு நடவடிக்கை
3. நிதி, முதலீடு, நிதி, செயற்பாட்டு நடவடிக்கை
4. முதலீடு, முதலீடு, நிதி, செயற்பாட்டு நடவடிக்கை
5. முதலீடு, முதலீடு, செயற்பாட்டு , முதலீடு நடவடிக்கை (…….)

22.LKAS – 08 “கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றம், வழு” நியமத்திற்கமைய சரியான கூற்றாக அமைவது கீழ் வரும் கூற்றுக்களில் எக் கூற்று / கூற்றுக்கள் ஆகும்.

A - கணக்கீட்டு கொள்கை மாற்றம் மேற்கொள்ள கூடியதாக இருப்பது நியமத்தின் மூலம் மாற்றம் கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் மட்டும் ஆகும்.

B - கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றம் கடந்த கால நிதிக்கூற்றுக்களில் எந்தொரு மாற்றத்தையும் மேற்கொள்ளக்கூடாது

C - கடந்த கால வழுக்கள் திருத்தப்படும் போது அது கடந்த கால நிதிக்கூற்றுக்களில் தாக்கம் ஏற்படகூடிவாறு சீராக்கம் செய்யப்பட வேண்டும்.

D - பெறுமான தேய்வு முறையானது நேர் கோட்டு முறையிலிருந்து ஒடுங்கு பாக முறைக்கு மாறல் கணக்கீட்டு கொள்கை மாற்றமாகும்

1. B,C மற்றும் D மட்டும்
2. B மற்றும் C மட்டும்
3. A,B மற்றும் C மட்டும்
4. B மற்றும் D மட்டும்
5. A,B,C மற்றும் D அனைத்தும் (……..)

23.வரைறுக்கப்பட்ட மாலன் பொது கம்பனியின் கணக்காண்டு 2026-03-31 இல் முடிவடைந்ததோடு நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் 2026-05-25 இல் முடிவடைந்தது. 2026-06-05 இல் இயக்குனர்களால் நிதிக்கூற்றுக்களுக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டது. 2026-03-31 இற்கு பின் இடம்பெற்ற நிகழ்வுகள் சில கீழ் வருமாறு

1. 2026-03-31 இல் காணப்பட்ட கட்டிடமொன்று 2026-04-18 இல் ஏறபட்ட தீயின் காரணமாக பூரணமாக அழிவுற்றது. அக்கட்டிடத்தின் அன்றைய தினத்திலான தேறிய பெறுமதி ரூபா 1,550,000 ஆகும்.
2. 2026-03-31 இல் காணப்பட்ட வியாபார வருமதிகள் மீதியில் உள்ளடங்கியுள்ள ரூபா 850,000 மீதி கடன்பட்டோன்னொருவன் முறிவடைந்துள்ளதாக 2026-04-30 இல் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
3. 2026-04-05 இல் கொள்வனவு செய்யப்பட்ட பொருள் இருப்பு ரூபா 25,000 செலவு செய்து 2026-05-10 இல் ரூபா 325,000 விற்பனை செய்யப்பட்டது
4. கம்பனியினால் பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியரொருவரினால் 2026-12-01 இல் கம்பனிக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட வழக்கின் தீர்ப்பு 2026-05-26 இல் வழங்கப்பட்டதோடு அதற்கமைய கம்பனியினால் ரூபா 350,000 இழப்பீடு அன்றைய தினமே ஊழியருக்கு வழங்கப்பட்டது. 2026-03-31 இல் இதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

“LKAS 10” “அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்கு பின்னரான நிகழ்வு” நியமத்திற்கமைய மேற்கூறிய நிகழ்வுகளை கவனத்திற்கொண்டு 2026-03-31 இல் முடிவடையும் வருடத்திற்கான இலாபத்தில் மற்றும் அன்றைய காணப்பட்ட கம்பனியின் மொத்தச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட தாக்கமாக அமைவது

	வருடத்தின் இலாபத்தின் மீத ஏற்பட்ட தாக்கம்	மொத்தச் சொத்துக்கள் மீத ஏற்பட்ட தாக்கம்
1.	ரூபா 2,400,000 இனால் குறைவடையும்	ரூபா 2,150,000 இனால் குறைவடையும்
2.	ரூபா 1,200,000 இனால் குறைவடையும	ரூபா 1,200,000 இனால் குறைவடையும்

3. ரூபா 1,200,000 இனால் குறைவடையும	ரூபா 2,750,000 இனால் குறைவடையும்
4. ரூபா 2,400,000 இனால் குறைவடையும	ரூபா 2,400,000 இனால் குறைவடையும்
5. ரூபா 1,200,000 இனால் குறைவடையும	ரூபா 850,000 இனால் குறைவடையும் (……..)

24.2026-04-01 இல் மோட்டார் வாகனமொன்றின் பயன்பாட்டு உரிமையை பெற்றுக்கொள்வதற்காக வரையறுக்கப்பட்ட சேம் கம்பனி குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ள தயாரானதோடு அது தொடர்பான கீழ்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

	ரூபா ‘000
ஆரம்பக் கொடுப்பனவு	2,000
குத்தகை பொறுப்பின் அடிப்படை அளவிடல்	7,000
நேர் கிரயம்	600

- ❖ மோட்டார் வாகனத்தின் பயனுள்ள ஆயட் காலம் 8 வருடங்களாவதோடு 8 வருடங்களின் பின் அதன் எஞ்சிய பெறுமானம் 1,600,000 ரூபாவாகும்.
- ❖ குத்தகை காலம் 6 வருடங்காலவதோடு குத்தகை கால முடிவில் மோட்டார் வாகனத்தின் உரிமை குத்தகைக் கம்பனிக்கு மாற்றமடையாது.

SLFRS – 16 (குத்தகை) ஒப்பந்ததிற்கமைய 2026-03-31 இல் முடிவடைந்த கணக்காண்டுக்காக இம் மோட்டார் வாகனத்தின் வருட தேய்வு பெறுமதி யாது?

1. ரூபா 1,600,000 ஆகும்	2. ரூபா 1,200,000 ஆகும்	3. ரூபா 1,000,000 ஆகும்
4. ரூபா 960,000 ஆகும்	5. ரூபா 1,400,000 ஆகும் (……….)

25.வரையறுக்கப்பட்ட றியானா பொது கம்பனி 2025-04-01 இல் மொத்த உரிமை ரூபா 9,900,000 ஆகும். அதில் ரூபா 1,900,000 நிறுத்தி வைக்கப்பட்ட வருவாயில் உள்ளடங்கியுள்ளதோடு 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்தினுல் ரூபா 1,000,000 ஆன ஒதுக்குகள் மூலதனமாக்கப்பட்டுள்ளதோடு அதற்காக நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய தகவல்கள்

- ❖ வருடத்தினுல் பங்கொன்றுக்கு ரூபா 50 படி கூறப்பட்ட சாதாரணபங்குகள் 50,000 உரிமை வழங்களொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அதனோடு தொடர்புடைய கூறப்பட்ட தொகை உரிய முறையில் கம்பனிக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.
- ❖ 2026-03-31 இல் முடிவுற்ற வருடத்திற்காக காலப்பகுதிக்கான இலாபம் ரூபா 2,000,000 ஆவதோடு மொத்த முற்றுமடங்கிய வருமானம் ரூபா 2,800,000 ஆகும்.
- ❖ 2026-03-31 இல் பொது ஒதுக்கத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்ட வருவாயிலிருந்து குறிப்பிட்ட பகுதியொன்று மாற்றப்பட்டுள்ளது.
- ❖ 2026-03-31 இல் எல்லா சீராக்கங்களுக்கு பின் நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய் கணக்கின் மீதி ரூபா 2,400,000 ஆகும் எனில் மேற்கூறப்பட்ட எல்லா கொடுக்கல் வாங்கல்களுக்கு பின் 2026-03-31 இல் கம்பனியின் மொத்த உரிமையாக அமைவது (ரூபா’000)

1. 10,500 ரூபா	2. 15,200 ரூபா	3. 16,700 ரூபா
4. 14,700 ரூபா	5. 13,700 ரூபா (……)

26.2026-03-31 இல் முடிவடையும் வருடத்திற்காக வரையறுக்கப்பட்ட றியானா கம்பனியுடன் தொடர்பான கீழே சில தகவல்கள் உமக்கு வழங்கப்படுகின்றது.

2026-03-31 இல் இருப்பு 120,000
2025-04-01 இல் இருப்பு 160,000
இருப்பு பேணும் காலம் 60 நாள்
மொத்த இலாப வீதம் 30%

வருடத்திற்கான கம்பனியின் வேலைநாட்கள் 360 ஆகும்
2026-03-31 இல் முடிவடையும் வருடத்திற்காக கம்பனி விற்பனை வருமானம் எவ்வளவு?

1. ரூபா 840,000 ஆகும்	2. ரூபா 960,000 ஆகும்.	3. ரூபா 1,200,000 ஆகும்
4. ரூபா 800,000 ஆகும்	5. ரூபா 1,092,000 ஆகும். (…..)

27.நந்தன் கம்பனி உற்பத்தி செய்யும் அலகொன்றிற்காக “P” எனும் மூலப்பொருள் 2 அலகுகள் தேவைப்படுகின்றது.

- ❖ இப் பண்டத்தின் மாத குறைந்த உற்பத்தி 2,500 அலகுகளாகும். மாத கூடிய உற்பத்தி 3,750 அலகுகளாகும்.
- ❖ “P” எனும் மூலப்பொருளுக்கான முதன்மை காலம் 2 மாதங்களாவதோடு சாதாரண முதன்மை காலம் 4 மாதங்காளாகும்.

“P” எனும் மூலப்பொருளுக்கான மறுகட்டளை மட்டம் மற்றும் இழிவு இருப்பு மட்டமாக அமைவது.

	மறுகட்டளை மட்டம் (அலகுகள்)	இழிவு இருப்பு மட்டம் (அலகுகள)
1.	45,000	20,000
2.	22,500	20,000
3.	45,000	10,000
4.	40,000	40,000
5.	57,500	20,000

(………)

28.உற்பத்தி கம்பனியொன்றின் 2026-09-30 இல் முடிவடையும் வருடத்திற்கான மதிப்பிடபடப்பட்ட தகவல்கள் சில கீழ் வருமாறு

❖ அலகுகிரயம் - முதன்மை கிரயம் 60 ரூபா
- மேந்தலை கிரயம்
- தயாரிப்பு பகுதி 15 ரூபா
- முடிவுறுத்தும் பகுதி 25 ரூபா

100 ரூபா

- ❖ அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு தாயாரிப்பு பகுதிக்கு இயந்திர மணித்தியாலங்கள் 3 உம் முடிவுறுத்தும் பகுதிக்கு ஊழிய மணித்தியாலங்கள் 2 உம் தேவைப்படுகின்றது.
- ❖ தயாரிப்பு பகுதியின் மதிப்பிடப்பட்ட மொத்த இயந்திர மணித்தியாலங்கள் 840,000 ஆவதோடு முடிவுறுத்தும் பகுதியின் மதிப்பிடப்பட்ட மொத்த ஊழிய மணித்தியாலங்கள் 400,000 ஆகும்.
- ❖ அலகொன்றின் கிரயத்தை மதிப்பிடும் போது ரூபா 1,400,000 காலாண்டுடன் தொடர்பான தொழிற்சாலை வாடகை கவனத்தில்கொள்ளப்பட்டிருக்கவில்லை
- ❖ ஒவ்வொரு பகுதியினதும் நில அளவு வருமாறு

தயாரிப்பு பகுதி 35,000 (சதுர கிலோமீற்றர்)

முடிவுறுத்தும் பகுதி 25,000 (சதுர கிலோமீற்றர்)

எல்லா கிரய உருப்படிகளையும் கவனத்தில்கொள்ளும் போது அலகொன்றின் மதிப்பிடப்பட்ட கிரய பெறுமதி எவ்வளவு?

1. ரூபா 110 ஆகும் 2. ரூபா 120 ஆகும். 3. ரூபா 112 ஆகும்
4. ரூபா 106 ஆகும் 5. ரூபா 115 ஆகும். (……)

29.“சரசு” உற்பத்தி கம்பனியின் 50,000 அலகுகளுக்கான தொழிற்பாட்டு மட்டத்தின் போது கீழ் வரும் தகவல்கள் உமக்கு வழங்கப்படுகின்றன.

	ரூபா “000
மொத்தப் பங்களிப்பு	2,500
விற்பனை வருமானம்	6,000
சமபாட்டு புள்ளியில் விற்பனை பெறுமதி	3,600

கம்பனியின் அலகு மாறும் கிரயம் மற்றும் மொத்த நிலையான கிரயம் (ரூபா “000)

	அலகு மாறும் கிரயம் ரூபா.	மொத்த நிலையான கிரயம் ரூபா.
1.	50	3,500
2.	50	1,500
3.	70	3,000
4.	70	1,500
5.	30	3,000

(………)

30.மூலதன முதலீட்டு தீர்மானங்களுடன் தொடர்புடைய சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.

A - செயற் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக பெற்றுக்கொள்ளப்படும் நீண்ட கால வங்கி கடன் மூலம் கிடைக்கப்பெறும் காசு ஆரம்ப காசு பாய்ச்சலாக (உட்பாய்ச்சலாக) கவனத்தில்கொள்ளப்பட வேண்டும்.

B - முதலீட்டு வருமானம் கணிப்பிடும் போது பணத்தின் கால பெறுமானம் கவனத்தில்கொள்ளப்படும்

C - செயற்திட்டமொன்றின் மொத்த காசு உட்பாச்சலின் பெறுமதி மொத்த காசு வெளிபாய்ச்சலுக்கு சமமாகும் காலம் மீளளிப்பு காலமாகும்.

D - தேறிய நிகழ்கால பெறுமதியின் மீது செயற்திட்டமொன்றை மதிப்பிடும் போது காசு உட்பாய்ச்சல்களின் நிகழ்கால பெறுமதி மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்களின் நிகழ்கால பெறுமதி சமமாகும் போது அச் செயற்திட்டத்ததை தெரிவுசெய்தல் மிகவும் பொருத்தமாகும்.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களில்

1. C மற்றும் D மட்டும் சரியாகும்.
2. C மட்டும் சரியாகும்.
3. B , C மற்றும் D மட்டும் சரியாகும்.
4. D மட்டும் சரியாகும்.
5. A மற்றும் C மட்டும் சரியாகும். (………)

இலக்கம் 31 தொடக்கம் 50 வரையிலான வினாக்களுக்கு சுருக்கமானதும் சரியானதுமான விடைகளை தொடர்பான வெற்றிடத்தில் எழுதுக.

31.அண்மை காலமாக இடம்பெற்ற சூழல் தாக்ககங்கள் சில கீழ்வருமாறு

A - மத்திய கிழக்கின் யுத்த நிலைமை காரணமாக இறக்குமதி பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

B - இலங்கை கணக்கீட்டு நியமத்தை மாற்றத்திற்குட்படுத்தி புதிய இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமங்கள் அறிமுகம் செய்தல்.

C - கணக்கீட்டு தகவல்களின் உருவாக்கத்தை செயற்திறனாக்க புதிய கணக்கீட்டு மென்பொருள்கள் தோற்றம் பெறல்.

D - 2025 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு (திருத்தப்பட்ட) சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படல்.

மேற்கூறப்பட்ட சூழல் தாக்கங்கள் உள்ளாகும் கணக்கீட்டு சூழல் காரணியை அடையாளம் கண்டு தொடர்பான எழுத்தினை, சூழல் காரணியின் முன் எழுதிகாட்டுக

		சூழல் தாக்கம்
1)	தொழில் மற்றும் தொழில்சார் சூழல்	………………..
2)	பொருளாதார மற்றும் அரசியல் சூழல	…………………
3)	தொழில்நுட்ப சூழல்	…………………
4)	சட்டச் சூழல்	…………………

32.தனியுடைமை வணிகமாகிய காயத்திரியின் வணிகத்தில் 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்தினுல் சொத்துக்கள் ரூபா 2,600,000 இனால் அதிகரித்துள்ளதோடு பொறுப்புக்கள் ரூபா 700,000 இனால் குறைவடைந்துள்ளது. எனினும் அம் மாற்றங்களை அறிந்துக்கொள்ளும்போது 2025-10-01 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 500,000 வங்கி கடன் கவனத்தில்கொள்ளப்பட்டிருக்கவில்லை

❖ கீழ்வரும் தகவல்கள் 2025 / 2026 வருடத்துடன் தொடர்பானது

- காயத்திரியினால் மேலதிகமாக ஈடுபடுத்தப்பட்ட மேலதிக மூலதனம் ரூபா 150,000
- காயத்திரியின் மாதாந்த பற்றுக்கள் ரூபா 25,000
- 2026-01-01 இல் மேற்கொள்ளப்பட்ட பொருள் பற்று ரூபா 105,000

2026-03-31 இல் முடிவுற்ற வருடத்திற்காக காயத்திரியின் வணிகத்தில் தேறிய இலாபம் / தேறிய நட்டமாக அமைவது (ரூபா ‘000)

வினா இலக்கம் 33 மற்றும் 34 இற்கு விடை அளிப்பதற்கு கீழ் வரும் தகவல்களை பயன்படுத்திக்கொள்க

ஊட்டிய பெறுமதி மீது வரிக்காக பதிவுசெய்யப்பட்ட வணிகமொன்றின் கீழ் வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. அக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஒன்றும் வணிகத்தினால் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

1. ரூபா 300,000 வியாபார சென்மதி மீதியினை தீர்ப்பதற்காக ரூபா 20,000 காசு கழிவினை நீக்கிகொண்டு உரிமையாளர் தனது தனிப்பட்ட நடைமுறை கணக்கினூடாக காசோலையொன்றை வினியோகித்தல்
2. ரூபா 1,500,000 நீண்டகால கடனொன்று பெற்றுக்கொள்ளப்பட்டதோடு அதற்காக செலுத்த வேண்டிய வருடாந்த வட்டி 12% ஆகும்.
3. ரூபா 177,000 (18% VAT வுடன்) க்கு வியாபார இருப்புக்கள் கடனுக்கு விற்கப்பட்டதோடு அதன் கிரயம் ரூபா 120,000 ஆகும்.
4. முதலாவது (1) கொடுக்கல் வாங்கலுடன் தொடர்பாக கடன்கொடுத்தோனுக்கு கொடுத்த காசோலை மறுக்கப்பட்டுள்ளதோடு கிடைத்த கழிவும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

33.மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சரியாக பதிவுசெய்யப்பட்ட பின் கீழ்லுள்ள உருப்படிகளில் ஏற்படும் தேறிய தாக்கத்தினை பெறுமதிகளுடன் காட்டுக.

தாக்கம் (குறைவு / அதிகரிப்பு / மாற்றமில்லை) பெறுமதி ரூபா’000

A. உரிமை ----------------------------

B. பொறுப்பு -----------------------------

34.மேலே இலக்கம் 3 மற்றும் 4 கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்வதற்கு தொடர்பான இரட்டை பதிவை எழுதி காட்டுக

கொ.வா.இல	விபரம்	வரவு ரூ. ‘000	செலவு ரூ. ‘000

35. கணக்கீட்டு எண்ணக்கருக்கள் தொடர்பாக கீழ் வரும் கூற்றுக்கள் உண்மையா (T) / பொய்யா (F) என முன்னாள் குறிப்பிடுக

		உண்மை (T) / பொய் (F)
A	தோற்றத்திலும் பார்க்க கருதுகோள் முக்கியத்துவ எண்ணக்கருவுக்கு அமைய பயன்பாட்டு உரிமையுள்ள சொத்துக்களின் தேய்வு செலவொன்றாக வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்படும்	……………………………………
B	வணிகமொன்றின் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுனரை அடையாளம் காண்பதற்கு அடிப்படையை வழங்குவது காலநேர எண்ணக்கருவாகும்.	……………………………………..
C	எல்லா கணக்கீட்டு அலகிற்கும் தொடர்ந்தியங்கும் தன்மை உள்ளதென்பதை அலகு எண்ணக்கருவின் அடிப்படை எடுகோளாகும்.	……………………………………..
D	ஆதனம் பொறி உபகரணம் மீள்மதிப்பீட்டு மாதிரியின் மீது காட்டுதல் வரலாற்று கிரய எண்ணக்கருவை பாதுகாக்கும்.	……………………………………..

36.கீழ் வரும் பொதுபேரேட்டின் கணக்குகள் உள்ளடங்கும் சரியான கணக்கு வகையினை குறிப்பிடுக

		கணக்கு வகை
A	பொது ஒதுக்கு கணக்கு	……………………………………
B	திரண்ட தேய்வு கணக்கு	……………………………………..
C	வருமான வரி ஏற்பாட்டு கணக்கு	……………………………………..
D	செலுத்திய பங்குலாப கணக்கு	……………………………………..

37.வரையறுக்கப்பட்ட சாந்தி பொது கம்பனி 2026-03-31 இல் இருப்பு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய சீராக்கங்கள் மேற்கொள்ளபடாமலிருந்ததோடு அன்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட பௌதிக இருப்பெடுத்தலுக்கமைய ரூபா 188,000 கிரயம் கொண்ட இருப்பு களஞ்சியத்தில் காணப்பட்டது.

கீழ் வரும் மேலதிக தகவல்கள் இருப்போடு தொடர்புபடுமாயின்

1. 2026-மார்ச்-28 இல் மேற்கொள்ளப்பட்ட கடன்கொள்வனவு பட்டியலுக்கமைய 14,500 ரூபா கிரயம்கொண்ட இருப்பு மார்ச் 31 ஆகும்போதும் வழியில் காணப்பட்டது.
2. 2026-மார்ச்-28 இல் பட்டியலிடப்பட்ட ரூபா 40,000 கொண்ட இருப்புக்கள் விற்பனை அன்றேல் திரும்பல் என்ற அடிப்படையில் வாடிக்கையாளரொருவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது பட்டியலிடப்பட்டிருந்தது கிரயத்தின் மீது 1/3 இலாபம் கிடைக்கும் வகையிலாகும். அவற்றில் 75% மானவை விற்பனை செய்யப்பட்டுள்ளதென வாடிக்கையாளர் தெரிவித்துள்ளார். அது தொடர்பாக சரியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளரிடமுள்ள மிகுதி இருப்புக்கள் மீள திருப்பி அனுப்பி வைக்கும் காலம் மார்ச் 31 ஆகும் போதும் காலம் கடந்து செல்லவில்லை.
3. 2026-03-31 இல் சரியான இருப்பின் கிரயம் தீர்மானிக்கப்பட்டபின் அவற்றின் தேறக்கூடிய பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு அன்றைய தினம் மொத்த இருப்புக்களின் எதிர்பார்க்கும் விற்பனை விலை ரூபா 225,000 ஆகவும் எதிர்பார்க்கும் விற்பனை செலவு ரூபா 25,000 ஆகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அ. 2026-03-31 இல் அடையாளம் காணப்படவேண்டிய சரியான கிரயம் எவ்வளவு?

……

ஆ. 2026-03-31 இல் இருப்பு சீராக்கம் காரணமாக 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபத்தின் மீதான தேறிய தாக்கம் எவ்வளவு?

	தேறிய தாக்கம்
பெறுமதி	குறையும் / அதிகரிக்கும்
ரூபா ………………	…………………………

38.அமாவும் இமாவும் முறையே 2 : 1 என்ற விகிதத்தில் இலாபநட்டங்களை பங்கிட்டுக்கொள்ளும் பங்குடைமை வணிகமொன்றின் 2025-04-01 இல் காணப்பட்ட உரிமை கட்டமைப்பு வருமாறு

	மூலதன கணக்கு ரூபா "000	நடப்பு கணக்கு ரூபா "000
அமா	3,800	200
இமா	2,400	300

2026-03-31 இல் இலாபத்தில் ¼ பங்கு உரித்துக்கொண்டு சனு பங்காளராக பங்குடைமை வணிகத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். சனு ரூபா 2,500,000 மோட்டார்வாகனமொன்றையும் ரூபா 500,000 காசினையும் அன்றைய தினம் மூலதனமாக கொண்டு வந்தார். அன்றைய தினம் நன்மதிப்பு சீராக்கம் பங்காளரின் மூலதன கணக்கினூடாக சீராக்கம் மேற்கொள்ளப்பட்டதோடு தொடர்பான சீராக்கங்களின் பின் 2026-04-01 இல் சனுவின் மூலதன கணக்கு மீதி ரூபா 2,550,000 ஆகும்.

2026-03-31 இல் முடிவடையும் வருடத்தினுல் தொடர்பான சீராக்கங்களின் காரணமாக அமாவின் நடப்பு கணக்கு மீதி ரூபா 125,000 இனாலும் இமாவின் நடப்பு கண்ககு மீதி ரூபா 175,000 இனாலும் அதிகரித்திரிந்தது.

அ. 2026-04-01 இல் மூலதன கணக்கு மீதி

அமாவின் ரூபா ('000) ………………….

இமாவின் ரூபா ('000) …………………..

ஆ. 2026-04-01 இல் வணிகத்தின் மொத்த உரிமை எவ்வளவு? ரூபா ('000) …………………..

39.பங்குடைமை வணிகமொன்றின் கணக்கு வைப்பு தொடர்பான கீழ் வரும் கூற்றுக்களை பூரணபடுத்துக.

A எழுத்துருவிலான பங்குடைமை ஒப்பந்தம் இல்லாத சந்தர்ப்பத்தில் பங்குடைமை கட்டளைச் சட்டத்தின் ………….. பிரிவிற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

B பங்குடைமையின் உரிமை மாற்றமடையும் போது நன்மதிப்பு பங்காளரின் மூலதன கணக்கினூடாக சீராக்கம் செய்யப்படுவதால் வணிகத்தின் மொத்த ……………… மாற்றமடையாது.

C பங்குடைமை வணிகமொன்றின் ………………………… பங்காளரினால் தனிப்பட்ட ரீதியில் செலுத்தி இருக்கும் போது அது …………………… செய்யப்பட வேண்டும்.

40.LKAS – 37 ஏற்பாடு, நிகழதக்க பொறுப்பு, நிகழதக்க சொத்து நியமத்திற்கமைய கீழ் வரும் கூற்றுக்கள் உண்மையா (T) / பொய்யா (F) என கூறுக.

		உண்மை (T) / பொய் (F)
A	ஏற்பாடொன்றை அடையாளம் காண்பதற்கான நியதிகள் நிறைவு செய்யப்படுமாயின் அது வருமான கூற்றினுல் செலவொன்றான அடையாளம் காணப்பட வேண்டும்.	……………………………………
B	எதிர்காலத்தில் ஏற்பட கூடிய தொழிற்பாட்டு நட்டமொன்றிற்கான ஏற்பாடொன்றை அடையாளம் காண்பதற்கு அது நம்பிக்கையுடன் அளக்க கூடியதாக இருக்க வேண்டும்.	……………………………………..
C	நிகழதக்க பொறுப்பினை நிதி நிலைமை கூற்றில் அடையாளம் காட்டப்படாமையால் அவை அளக்க வேண்டிய அவசியமில்லை	……………………………………..
D	நிகழதக்க சொத்து நிதி நிலைமை கூற்றினுல் அடையாளம் காணக்கூடியதாக இருப்பது அதன் மூலம் எதிர்கால பொருளாதார நயங்கள் உட்பாச்சப்படுவது எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே ஆகும்.	……………………………………..

41.வரையறுக்கப்பட்ட விஜித் பொது கம்பனி 2026-01-01 இல் வாடிக்கையாளரொருவருடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளதோடு அவ் ஒப்பந்தத்திற்கமைய செயலாற்றுகை கடப்பாடுகள் மற்றும் அவற்றி சார்பு தனி விற்பனை விலைகள் கீழ் வருமாறு

செயலாற்றுகை கடப்பாடு	சார்பு தனி விற்பனை விலை ரூபா
உற்பத்தி இயந்திரத்தை வழங்கள்	180,000
நிறுவுதல்	30,000
சேவை வழங்கள்	90,000

❖ நிறுவுதல் மற்றும் சேவை வழங்கள் சந்தையிலுள்ள ஏனைய வழங்குனர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ள வாடிக்கையாளருக்கு முடியும்.

❖ மேற்கூறப்பட்ட எல்லா நயங்களையும் உரித்தாக்கிகொள்ள வாடிக்கையாளர் உடன்பட்டு இந்திரத்தை 2026-01-31 இல் வாடிக்கையாளரின் வளாகத்தினுல் ஒப்படைக்கப்பட்டு நிறுவப்பட்டது.

❖ இவ் ஒப்பந்தத்தின் மொத்த வழங்கள் பெறுமதி 240,000 ரூபா ஆவதோடு அது 2026-01-31 இல் வாடிக்கையாளரினால் செலுத்தப்பட்டது.

❖ சேவை வழங்கள் தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைய இரண்டு மாதங்களுக்கொருமுறை வருடத்தினுல் சேவை வழங்கள் 6 வழங்கப்பட வேண்டும். முதலாவது சேவை வழங்கள் 2026-01-31 இல் வழங்கப்பட்டது.

❖ கம்பனியினால் உற்பத்தி இயந்திரம் வழங்கள் தொடர்பாக கழிவு வழங்குவது இல்லை

SLFRS – 15 (வருமானம) நியமத்திற்கமைய இவ் ஒப்பந்ததுடன் தொடர்பாக வரையறுக்கப்பட்ட விஜித் பொது கம்பனியினால் 2026-03-31 இல் அடையாளம் காணவேண்டிய வருமானம் மற்றும் உழைக்கப்படாத வருமானம் எவ்வளவு?

A. அடையாளம் காணப்பட வேண்டிய வருமானம் (ரூபா) ………………

B. உழைக்கப்படாத வருமானம் (ரூபா) ………………

42.நிதி அறிக்கைப்படுத்தல எண்ணக்கரு சட்டகத்துக்கு (2018) அமைய கீழ் வரும் கூற்றுக்களை பூரணப்படுத்துக

A தகவல்களை பயன்படுத்தும் பிரிவினரின் தீர்மானங்களை மாற்றி அமைப்பதற்கு நிதிக்கூற்று தகவல்களுக்கு முடியுமாயின் அத் தகவல்கள் ……………………………….. உடையதாகும்.

B ……………………………. என்பது பொருளாதார நயங்கள் தோற்றுவித்தல் …………………… உள்ள உரித்தாகும்.

C தகவல்கள் நம்பகத்தன்மையுடன் வெளிப்படுத்துவதற்காக தகவல்கள் பூரணமானதும் மற்றும் …………………… ஆக வேண்டியதோடு வழுவற்றதாக காணப்பட வேண்டும்

43.வரையறுக்கப்பட்ட நந்து பொது கம்பனியின் 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசு பாச்சல் தொடர்பான கீழ் வரும் தகவல்கள் வழங்கப்படுகின்றன.

	ரூபா '000
2025-04-01 இல் காசும் காசிற்கு சமமானவை	1,530
2026-03-31 இல் காசும் காசிற்கு சமமானவை	5,000
வரிக்கு முன் தேறிய இலாபம்	1,150
வருமான வரி மற்றும் வரி செலுத்தியது	300
முதலீட்டு நடவடிக்கையில் ஈடுபடுத்திய தேறிய காசு பாச்சல்	500
நிதி நடவடிக்கையில் ஈடுபடுத்திய தேறிய காசு பாச்சல்	2,070

2025 / 2026 வருடத்தினுல்

நடைமுறைச் சொத்து (காசும் காசிற்கு சமமானவை தவிர்த்து)	250
நடைமுறைச் சொத்து (அட்டுறு வரி குறைவு வட்டி தவிர்த்து)	150
வருடத்தின் வட்டி செலவு	550

2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் ஆதன பொறி உபகரணத்தின் தேய்வு தொகை எவ்வளவு?

…………………………..

44.முகாமை கணக்கீட்டினுல் கிரயத்துடன் தொடர்பான முன்வைக்கப்பட்டுள்ள கீழ் வரும் கூற்றுக்கள் உண்மையா (T) / பொய்யா (F) என கூறுக

		உண்மை (T) / பொய் (F)
A	ஆழ்ந்த கிரயம் மற்றும் சந்தர்ப்ப கிரயம் கட்டுப்பாட்டு பணிகளுக்காக கிரய வகைப்படுத்தலின் போது கவனத்தில்கொள்ளப்படும் கிரய வகைகள் இரண்டாகும்.	………………………………………
B	களஞ்சிய பேரேட்டினை தயாரிக்கும் போது பொருள் பெறுகை பத்திரம் மற்றும் பொருள் வேண்டுகோள் பத்திரம் மூல ஆவணங்களாக பயன்படுத்திக்கொள்ளப்படும்.	……………………………………..
C	இருப்பு மட்டங்களை பேணுதல் இருப்புகட்டுப்பாட்டு நுட்ப முறையொன்றாக கிரய கட்டுப்பாட்டில் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது.	……………………………………..
D	நேர் கிரயம் உற்பத்தி அலகின் மீது பகிரும்போது பொது பணி கிரய உள்ளடக்க வீதம் முக்கியமான பணியொன்றை நிறைவேற்றுகின்றது.	……………………………………..

45.2026-03-31 இல் வரையறுக்கப்பட்ட பொது கம்பனியொன்றுடன் தொடர்பான கீழ் வரும் தகவல்கள் வழங்கப்படுகின்றன

நடைமுறை விகிதம் 3 தடவைகள்

நடைமுறை சொத்து 180,000 ரூபா

2025-04-01 இருப்பு 32,000 ரூபா

சாராசரி இருப்பு 40,000 ரூபா

இருப்பு புரள்வு விகிதம் 8 தடவைகள்

மொத்த இலாப வீதம் 20%

அ. 2026-03-31 இல் கம்பனியின்

விரைவு சொத்து விகிதம் எவ்வளவு? ……………………..

ஆ. 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனை பெறுமதி எவ்வளவு? ………………..

46.வணிகமொன்றின் 2026 ஜனவரி மாதத்திற்கான சம்பளம் தொடர்பான கீழ் வரும் தகவல்கள் வழங்கப்படுகின்றன.

❖ தேறிய சம்பளம் ரூபா 1,740,000

கழி- ஊழியர் கடன் அறவீடு ரூபா 160,000

சம்பள முற்பணம் ரூபா 70,000

தொழிற் சங்க பங்களிப்பு ரூபா 10,000

EPF க்கான ஊழியரின் பங்களிப்பு 10% ஆகும்.

❖ வேறு கழிப்பனவுகள் எதுவும் ஜனவரி மாதம் தொடர்பாக இடம்பெறவில்லை

❖ மொத்த சம்பளத்தில் 15% முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) நிறுவனத்தினால் (தொழில் கொள்வோரின்) பங்களிப்பு செய்யப்படுகின்றது.

அ) ஜனவரி மாதம் ஊழியர் தொடர்பான மொத்தச் செலவாக இலாபநட்ட கணக்கில் மேற்கொள்ளவேண்டிய கழிப்பனவு தொகை எவ்வளவு? ………………………

ஆ) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான (ETF) பங்களிப்பை காட்டும் கணக்கீட்டு இரட்டை பதிவை (பெறுமதிகளுடன) காட்டுக

………

………

………

47.உற்பத்தி திணைக்களம் இரண்டினையும் மற்றும் ஒரு சேவை திணைக்களத்தையும் கொண்டுள்ள உற்பத்தி நிறுவமொன்றின் உற்பத்தியுடன் தொடர்பான மதிப்பிடப்பட்ட சில தகவல்கள் கீழ்வருமாறு

			ரூபா
❖ அலகின் கிரயம்	-	நேர்பொருள்	150
		நேர் உழைப்பு	120
		ஏனைய நேர்	30
		மேந்தலை கிரயம்	150
			450

❖ அலகொன்றை உற்பத்தி செய்வதற்காக ஒன்று திரட்டும் திணைகளம் 4 இயந்திர மணித்தியாலங்களையும் முடிவுறுத்தும் திணைக்களம் ஊழியர் மணித்தியாலங்கள் இரண்டினையும் செலவு செய்கின்றது.

❖ ஒன்று திரட்டும் திணைக்களத்தின் பொது பணி கிரயம் இயந்திர மணித்தியாலங்களை அடிப்படையாக கொண்டு உள்ளடக்கப்படுவதோடு உள்ளடக்கல் வீதம் இயந்திர மணித்தியலாத்திற்கு 20 ரூபாவாகும்.

❖ ஒன்று திரட்டும் திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த இயந்திர மணித்தியாலங்கள் 20,600 ஆவதோடு முடிவுறுத்தல் திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஊழிய மணித்தியாலங்கள் 10,000 ஆகும்.

❖ சேவை திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த பொது பணி கிரயம் ரூபா 150,000 ஆகும்.

அ. முடிவுறுத்தல் திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த பொது பணி கிரயம் எவ்வளவு? …………………..

ஆ. உற்பத்திக்காக மதிப்பிடப்பட்ட மொத்த பொதுபணி கிரயம் எவ்வளவு?.......................................

48.வரையறுக்கப்பட்ட சுமதி பொது கம்பனி உற்பத்தி வணிகமாவதோடு 2026-03-31 இல் முடிவடையும் காலாண்டுக்காக கீழ் வரும் கிரய தகவல்கள் வழங்கப்படுகின்றன.

உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை 50,000

மொத்த கிரயம் (ரூபா’000) 15,000

அலகொன்றின் மாறும் பொது பணி கிரயம் ரூபா 70

மொத்த உற்பத்தி பொது பணி கிரயம் (ரூபா’000) 5,000

ஏனைய தகவல்கள்

மொத்த மாறும் செலவு மொத்த கிரயத்தில் 60% ஆவதோடு மூல கிரயத்தில் உள்ளடங்குவது மாறும் செலவு மட்டுமாகும்.

கீழ் வருவனவற்றை கணிப்பிட்டு காட்டுக

அ. மொத்த மூலக்கிரயம் (ரூபா'000) …………………..

ஆ. மொத்த உற்பத்தி கிரயம் (ரூபா'000) ……………….

இ. மொத்த உற்பத்தியல்லா பொதுபணிக் கிரயம் (ரூபா'000) ………………….

49.வரையறுக்கப்பட்ட அனுர பொது கம்பனி தனது உச்ச உற்பத்தி இயலுமையான 2,000 அலகுகளில் 75% மான இயலுமை நடைமுறையில் பயன்படுத்திகொண்டுள்ளது. கம்பனியின் நடைமுறை தொழிற்பாட்டு மட்டத்தில் அதன் கிரய தகவல்கள் வருமாறு

	ரூபா
அலகொன்றிற்கான நேர்பொருள் கிரயம்	200
அலகொன்றிற்கான நேர் உழைப்பு கிரயம்	150
மொத்த மாறும் உற்பத்தி பொதுபணிக் கிரயம்	225,000
மொத்த நிலையான உற்பத்தி பொதுபணிக் கிரயம்	600,000

ஒரு உற்பத்தி அலகின் பட்டியல்படுத்தப்பட்ட விற்பனை விலை ரூபா 1,200 ஆவதோடு எல்லா அலகுகளுக்கும் நடைமுறையில் ரூபா 200 வியாபார கழிவு வழங்கப்படுகின்றது.

அ. சமப்பாட்டு புள்ளியை (ரூபா) பெறுமதியில் காட்டு ……………………….

ஆ, நடப்பு தொழிற்பாட்டு மட்டத்தில் கம்பனி உழைக்கும் இலாபம் எவ்வளவு?..............................

50.வரையறுக்கப்பட்ட சாந்தி பொது கம்பனி தனது உற்பத்தி நடவடிக்கைகளை விரிவாக்கும் நோக்கில் நவீன தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய தன்னியக்க இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய எதிர்பார்துள்ளது. இவ் இயந்திரத்தின் பயனுள்ள ஆயுட்காலம் 5 வருடங்களாகும். எஞ்சிய பெறுமானம் 200,000 ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு இவ் இயந்திரத்தின் வருடாந்த தேய்வு ரூபா 300,000 ஆகும்.

இவ் செயற்திட்டதுடன் தொடர்பான மதிப்பிடப்பட்டுள்ள தேறிய இலாபங்கள் வருமாறு

வருடம்	தேறிய இலாபம் (ரூபா '000)
1	300
2	450
3	400
4	150
5	125

கீழ்வருவனவற்றை கணிப்பிடுக

அ. இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் : ரூபா …………………….

ஆ. செயற்திட்டத்தின் கணக்கீட்டு சாராசரி வருவாய் வீதம் : ……………………….

(மொத்தம் 200 புள்ளிகள்)